நாள்: 11.07.2014

## இன்றைய வேளாண் செய்திகள்

தினமலர்

### வால்பாறை, ஆனைமலையில் தொடர் மழை

**வால்பாறை**;வால்பாறை மற்றும் ஆனைமலையில், விடிய, விடிய பெய்த கன மழையினால், மூன்று வீடுகள் இடிந்து சேதமாயின; மண் சரிவுகள் ஏற்பட்டன.கோவை, வால்பாறை மற்றும் எஸ்டேட் பகுதிகளில், நேற்று முன்தினம் இரவு முதல், விடிய, விடிய கனமழை பெய்தது. இதனால், துளசிங்கநகர் பகுதியில், இரண்டு வீடுகள் இடிந்து சேதமாயின; பெரும்பாலான இடங்களில், மண் சரிவு ஏற்பட்டது; மரங்கள் சரிந்து, மின் கம்பங்கள் மீது விழுந்தது.அதிகபட்சமாக, மேல்நீராறு அணைப்பகுதியில், 87 மி.மீ., மழை பெய்துள்ளது.

ஆனைமலை அடுத்துள்ள, சோமந்துரை ஊராட்சியில், 1980ல், இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டத்தில், 25 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நேற்று முன்தினம் இரவு, பெய்த மழையில், அங்குள்ள ராமன் என்பவரது வீடு, இடிந்து தரை மட்டமானது. மேலும், இங்குள்ள 20க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழும் ஆபத்தில் உள்ளதால், அங்கு வசித்துவந்த மக்கள், உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அணைகள் நிலவரம்:வால்பாறையில், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம், நேற்று காலை, 52 அடியாக உயர்ந்தது; அணைக்கு, வினாடிக்கு, 420 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து, வினாடிக்கு, 339 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

இதே போல், 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம், நேற்று காலை, 18 அடியாக உயர்ந்தது. அணைக்கு, வினாடிக்கு, 392 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து, வினாடிக்கு, 25 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

## குன்னூரில் தேயிலை ஏலம் புறக்கணித்த வர்த்தகர்கள்

**குன்னூர்**:தேயிலை வர்த்தகர்களுக்கு 15 கோடி ரூபாய் அளவுக்கு வணிக வரித்துறை 'ரிட்டர்ன்ஸ்' தராத நிலையில், குன்னூரில் வெளிநாட்டு வர்த்தகர்கள் ஏலத்தை புறக்கணித்தனர்.நீலகிரியில் உற்பத்தியாகும் தேயிலை துாள், குன்னூரில் உள்ள மாநில அரசின் டீ சர்வ் மற்றும் தனியார் தேயிலை வர்த்தகர்களின் ஏல மையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.இதில், உள்நாடு மற்றும் வெளிநாடு ஏற்றுமதி வர்த்தகர்கள் பங்கேற்கின்றனர்.

நேற்று முன்தினம் 28வது ஏலம் துவங்கியது. ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 465 கிலோ தேயிலை துாள் ஏலத்திற்கு வந்தது. உள்நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே பங்கேற்றனர்.வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்கள் புறக்கணித்தனர். உள்நாட்டு வர்த்தகர்கள் மூலம் மொத்தம் 5 சதவீதம் மட்டுமே விற்பனையானது.

வர்த்தகர் மகேஷ் கூறுகையில்,"சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கு 1 சதவீதமும், கம்பெனி மற்றும் எஸ்டேட் தொழிற்சாலைகளுக்கு 5 சதவீதமும் வாட் வரி வசூலிக்கப்படுகிறது.வெளிநாட்டின் ஏற்றுமதிக்கான 'எச்' ஆவணத்தில் வரி இல்லாமல் தான் தாக்கல் செய்யப்படுகிறது. ஏற்றுமதிக்கு வரி விலக்கு உள்ள நிலையில், கடந்த 3 ஆண்டுகளாக வணிக வரித்துறை சார்பில், வர்த்தகர்களுக்கு 'ரிட்டர்ன்ஸ்' தருவதில்லை.இதுவரை 15 கோடி ரூபாய் அளவுக்கு வணிக வரித்துறை திருப்பி தராத நிலையில், ஏற்றுமதி வர்த்தகர்கள் ஏலத்தில் பங்கேற்கவில்லை," என்றார்.

## பெரியாறில்கன மழை

**கூடலுார்**:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் நேற்று கன மழை பெய்தது. பெரியாறில் 62.2 மி.மீ., தேக்கடியில் 42.2 மி.மீ., மழை பதிவானது. முற்றிலும் குறைந்த நீர்வரத்து, நேற்று பெய்த கன மழையால் 403 கன அடியாக அதிகரித்துள்ளது. நீர்மட்டம் 112.80 அடியாக உள்ளது.தமிழகப்பகுதிக்கு 400 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், நீர்வரத்து மேலும் உயரும் வாய்ப்பு உள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகள் தவிர, தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை

பெய்தது.மழையளவு(மீ.மீ.,): பெரியாறு 62.2, தேக்கடி 42.2, கூடலூர் 8, உத்தமபாளையம் 16, சண்முகாநதி அணை 9, வீரபாண்டி 10, மஞ்சளாறு 12.

## சர்க்கரை ஆலை கிராம கூட்டம்

**கள்ளக்குறிச்சி**: கள்ளக்குறிச்சி அடுத்த தென்கீரனூர் கிராமத்தில் நேற்று கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை சார்பில் கிராம கூட்டம் நடந்தது. தெற்கு கோட்ட கரும்பு அலுவலர் வெங்க டேசன் தலைமை தாங்கினார். கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு பெருக்கு அலுவலர் மாமுண்டி பேசினார். கரும்பு தோகைகளை எரிப்பதால் சுற்றுப்புறச்சூழல் மாசுபடும். நலத்திட்டங்கள், நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தின் பயன்பாடுகள், இயந்திர அறுவடையின் மூலம் விரைந்து கரும்பு வெட்டி முடிப்பது குறித்து விளக்கப்பட்டது. கரும்பு உதவியாளர்கள் சம்பத், ஜீவானந்தம், சுந்தரமூர்த்தி, புருஷோத்தமன் உட்பட ஏமப்பேர், கள்ளக்குறிச்சி, தென்கீரனூர், விளம்பார் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர். கூட்ட ஏற்பாடுகளை தென்கீரனூர் பிரிவு கரும்பு அபிவிருத்தி உதவியாளர் ஜெயபாண்டியன் செய்திருந்தார்.

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ.20 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

**நாமக்கல்**: நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 20 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல், வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்க குடோனில் பருத்தி ஏலம் நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு, நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 900 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 6,300, குறைந்தபட்சமாக, 5,800 ரூபாய், சுரபி ரகம் அதிக பட்சமாக, 7,295, குறைந்த பட்சமாக, 6,700 ரூபாய். ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 5,300, குறைந்த பட்சமாக, 4,800 ரூபாய்க்கு ஏலம் நடந்தது. நேற்று, மொத்தமாக, 20 லட்சம்

ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## முட்டை விலை 350 காசாக நிர்ணயம்

**நாமக்கல்**: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 350 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 360 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசு குறைந்து, 350 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 396, பெங்களூரு, 383, மைசூர், 387, ஹைதராபாத், 345, மும்பை, 385, விஜயவாடா, 325, கொல்கத்தா, 370, பர்வாலா, 295, டில்லி, 315. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று, நடந்த பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 57 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 78 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## வேளாண் துறைக்கு முக்கியத்துவம் மத்திய பா.ஜ., அரசின் பட்ஜெட் பெரும்பாலான மக்கள் வரவேற்பு

**நாமக்கல்**: பா.ஜ., அரசின் பொது பட்ஜெட்டில், அறிவிக்கப்பட்ட திட்டம் குறித்து, பெரும்பாலான மக்கள் நம்பிக்கையான தகவலை தெரிவித்த நிலையில், தேசிய நதிகள் இணைப்பு திட்டத்துக்கு பெரும்பாலானோர் ஆதரவு தெரிவித்தனர்.

மத்திய பொது பட்ஜெட்டை நேற்று, புதிதாக அமைந்துள்ள பா.ஜ., அரசின் நிதி அமைச்சர் அருண்ஜெட்லி தாக்கல் செய்தார். கவர்ச்சிகரமான திட்டம் அறிவிப்பில் இல்லாமல், தேசிய நதிகள் இணைப்பு உள்ளிட்ட தொலைநோக்கு திட்டம் அதிகமாக உள்ளதால், பெரும்பாலான மக்கள் வரவேற்றுள்ளனர்.

* தமிழ்நாடு மாநில லாரி உரிமையாளர் சம்மேளன தலைவர் நல்லதம்பி:

டயர் இறக்குமதியில் மறு மதிப்புகூட்டு வரி, சுங்கசாவடியில் கட்டண கொள்ளை, டீஸல் மீதான வரி மற்றும் விலைஉயர்வு உள்ளிட்ட பிரச்னை தீர்க்க, புதிய அரசிடம் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், பட்ஜெட்டில் சாலைபோக்குவரத்து துறை சார்ந்த பிரச்னைகளை தீர்க்க எவ்வித அறிவிப்பும் இல்லை. வேளாண் துறைக்கு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் வரவேற்கக் கூடியது.

*தமிழ்நாடு முட்டை கோழிப்பண்ணையாளர் சம்மேளன துணைத் தலைவர் சுப்ரமணியன்:

வேளாண் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. திறந்தவெளி மார்க்கெட் மூலம் உணவு தானியம் விற்கப்படும் முயற்சியால், பதுக்கல் கட்டுப்படுத்தப்படும். பவுல்ட்ரி துறை சார்ந்து எவ்வித அறிவிப்பும் இல்லை. மானியக் கோரிக்கையிலாவது, பவுல்டரி தொடர்பான பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என எதிர்பார்க்கிறோம்.

*சுற்றுலா ஆர்வலர் பிரணவ்குமார்:

தேசிய அளவில், பாரம்பரிய சின்னங்களை பாதுகாப்பதற்கான அறிவிப்பு, புண்ணிய தலங்களுக்கு ரயிலில் செல்ல சிறப்பு ரயில், இ-விசா, புகையிலை பொருட்களுக்கு வரி அதிகரிப்பு, மூத்த குடிமக்களுக்கு பென்ஷன் திட்டம் ஆகியவை வரவேற்கக் கூடியதாக உள்ளது.

*இல்லத்தரசி உமாராணி: பெண்கள் பாதுகாப்பு, குழந்தைகளை காத்திடுதல், அனைத்து வீடுகளிலும் கழிப்பிட வசதி, வீட்டு கடனுக்கான வரிச்சலுகை, ஆபரணங்கள் மீதான வரிகுறைப்பு ஆகியவை வரவேற்கக் கூடியதாக உள்ளது.

*இல்லத்தரசி கண்ணகி: விவசாயம், தொழில் வளர்ச்சி, மருத்துவ வசதி, மின்சார பிரச்னைக்கு தீர்வு உள்ளிட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மொத்த திட்டங்களிலேயே, தேசிய நதிகளை இணைக்கும் திட்டம் வரவேற்பை பெற்றுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மழைநீர்சேகரிப்பு அமைப்பு குறித்து ஆய்வு

**விருதுநகர்** : விருதுநகர் கலெக்டர் ஹரிஹரன், கலெக்டர் அலுவலகம், அதன் வளா கத்தில் உள்ள பொதுப்பணித்துறை அரசு விருந்தினர் மாளிகை, மாவட்ட தொழில்

மையம் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மழைநீர்சேகரிப்பு அமைப்பை பார்வையிட்டார்.

## "ரம்புட்டான்' பழ சீசன்

**குன்னூர்** : குன்னூர் அருகே பர்லியார் பகுதியில் துரியன்,"மலை நெல்லி' என, அழைக்கப்படும் சுருளி பழம் உட்பட பல்வேறு அரிய வகையிலான பழங்கள் விளைகின்றன. தற்போது, இங்கு ரம்புட்டான் பழம் சீசன் களை கட்டியுள்ளது. கடந்த மாதத்தில் ஒரு கிலோவுக்கு 600 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வந்த ரம்புட்டான் பழங்கள் தற்போது 350 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## உற்பத்தி இலக்கை பூர்த்திசெய்ய சாகுபடி பரப்பை அதிகரிக்க முடிவு

**திண்டுக்கல்** : உணவு தானிய உற்பத்தி இலக்கு 3.75 லட்சம் மெட்ரிக் டன்னை பூர்த்தி செய்வதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் நெல், சிறுதானியம், பயறு வகைகளின் சாகுபடி பரப்பினை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடும் வறட்சி காரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக உணவு தானிய உற்பத்தி இலக்கு நிறைவு செய்யப்படவில்லை. திண்டுக்கல்லை வறட்சி மாவட்டமாக அரசு அறிவிக்க விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.நடப்பு ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் 3 லட்சத்து 75 ஆயிரத்து 200 மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதை பூர்த்தி செய்ய மாவட்டத்தில் 20 ஆயிரம் எக்டர் பரப்பளவில் நெல்லும், 75 ஆயிரம் எக்டர் பரப்பளவில் சிறுதானியமும், 23 ஆயிரம் எக்டர் பரப்பளவில் பயறு வகைகளும் சாகுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை இணை இயக்குனர் சம்பத் குமார் கூறுகையில்,"" இலக்கினை பூர்த்தி செய்ய வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள அலுவலர்கள் அனைவரும் களப்பணி மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளோம். குறைந்தளவு

தண்ணீரில் அதிக மகசூல் தரும் பயிர்களை மட்டுமே சாகுபடி செய்ய வலியுறுத்தியிருப்பதோடு, அதற்கான விதைகளை மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம்," என்றார்.

## கொடைக்கானலில் சாரல் மழை; பருவ மழை துவங்கிய அறிகுறி

**கொடைக்கானல்** : கொடைக்கானலில் நேற்று அதிகாலை 3.30 மணிக்கு, மித வேகத்தில் வீசிய காற்றோடு, சீராக சாரல் மழை பெய்தது. இடைவிடாது பெய்த மழை, பகல் 3.30 மணி வரை நீடித்தது. இந்த மழை 8 மி.மீ., ஆக, கொடைக்கானல் போட்கிளப்பில் பதிவானது.

மழை காரணமாக நகரில் குளிர்ச்சி அதிகரித்து இருந்தது. அதிகபட்ச வெப்பநிலை 16 டிகிரி செல்சியசாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 8 டிகிரி செல்சியசாகவும், காற்றின் வேகம் 5 கி.மீ., ஆகவும், காற்றில் நிலவிய ஈரப்பதம் 86 சதவீதமாகவும் இருந்தது. மழை காரணமாக சுற்றுலாத் தலங்கள் பயணிகள் வருகையின்றி, வெறிச்சோடி காணப்பட்டது. ஏரியிலும் படகுச்சவாரி செய்ய ஆளில்லாத நிலையே இருந்தது. நேற்றைய மழையால் ஏரியின் நீர்மட்டம் 1 அடி உயர்ந்தது. அதே வேளையில் நகராட்சி நீர்த்தேக்கத்தில் அரை அடி நீர்மட்டம் உயர்ந்து,நேற்றைய நிலவரப்படி நீர்மட்டம் இரண்டரை அடியாக(மொத்தம் 18 அடி) இருந்தது. மனோரத்தினம் சோலை அணையில் நீர்மட்டம் ஒன்றரை அடியாக(மொத்தம் 27 அடி) இருந்தது. தென்மேற்குப் பருவமழை தொடங்கியதற்கான அறிகுறியாக இம்மழை இருந்ததால், இனிவரும் நாட்களிலும் மழை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிருஷ்ணகிரியில் கனமழை விவசாயிகள் மகிழ்ச்சி

**கிருஷ்ணகிரி**: கிருஷ்ணகிரி நகரில் நேற்று மாலை சுமார் அரை மணி நேரம் திடீர் மழை பெய்ததால், மக்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை வழக்கமாக ஜூன் மாத இறுதியில் துவங்கும். அப்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்யும். இவ்வாறு, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் பெய்யும் மழையை கொண்டு, மானாவாரி நிலங்களில் நிலக்கடலை விதைப்பு, ராகி விதைப்பு மற்றும் சிறு தானிய பயிர்கள் விதைப்பு பணியை விவசாயிகள் மேற்கொள்வர்.

ஆனால், இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை துவங்கியும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை பெய்வில்லை. இதனால், நிலக்கடலை விதைப்பு மற்றும் ராகி விதைப்புக்காக நிலங்களை உழவு ஓட்டி வைத்திருந்த, விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

கடந்த ஒரு வார காலமாக மாவட்டத்தில், வழக்கத்துக்கு மாறாக, அதிக வெப்பக்காற்று வீசி வந்தது. இந்நிலையில், நேற்று பகல், 3 மணியில் இருந்து, கிருஷ்ணகிரி நகர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில், வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

கிருஷ்ணகிரி நகரில் மாலை, 4 மணி அளவில் திடீரென, இடியுடன் கூடிய மழை பெய்தது. சுமார் அரை மணி நீடித்த மழையால், சாலையில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதே போல், மாவட்டத்தில் பல இடங்களிலும் பரவலாக, மாலை, 4 மணி முதல் மழை பெய்துள்ளது. இந்த மழை, மேலும் இரண்டு நாட்களுக்கு தொடரும் பட்சத்தில் மானாவாரி நிலங்களில் ஈரப்பதம் அதிகரித்து, நிலக்கடலை மற்றும் ராகி பயிர் விதைப்பு தொடர முடியும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். வெப்பக்காற்று வீசி வந்த நிலையில், திடீர் மழை பெய்துள்ளதால், கிருஷ்ணகிரி முழுவதும் குளிர்ந்து காணப்பட்டது.

## அதிகரிக்கும் மக்கள் தொகையால் குறையும் விளை நிலங்கள்

**தேனி** : தேனி மாவட்டத்தில் அதிகரித்து வரும் மக்கள் தொகையால், விளை நிலங்கள் குறைந்து வருகிறது.

"முப்பது கோடி முகமுடையாள்' என்றார் பாரதியார். உலக மக்கள் தொகையில் இரண்டாம் இடத்தில் உள்ள இந்தியா, விரைவில் முதல் இடத்தை எட்டும். உலக

மக்கள் தொகையில் 6 பேரில் ஒருவர் இந்தியர். சீனாவின் பிறப்பு சதவீதம் 12 சதவீதமாகவும், இந்தியாவின் பிறப்பு சதவீதம் 22 சதவீதமாக உள்ளது. 2025ல் இந்திய மக்கள் தொகை 145 கோடியை எட்டும், என கணித்துள்ளனர். பூமியில் உள்ள வளத்தை குறிப்பிட்ட அளவுதான் பயன்படுத்த முடியும். பிறப்பு விகிதம் அதிகரித்து, இறப்பு விகிதம் குறைந்துள்ள நிலை, மருத்துவ கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட காரணங்களால் மக்கள் தொகை அதிகரித்துள்ளது.மக்கள் தொகை அதிகரிப்பால், மனித சக்தி நமக்கு கிடைக்கும். இதில் இளைஞர் சக்தியை முறையாக பயன்படுத்தினால் வளர்ச்சியின் உச்சத்தை எட்டலாம். அதே நேரத்தில் மக்கள் தொகை வளர்ச்சியால், விளை நிலங்கள் பிளாட்டுகளாக மாறுவது, வனப்பகுதியை அழிப்பது, குடிநீர், மணல் உள்ளிட்ட இயற்கை வளங்களை சுரண்டுவதால், சூழல் சமநிலை பாதிக்கப்படுகிறது. இதனால் பருவமழை பாதிப்பு, பூகம்பம், சுனாமி போன்ற இயற்கை பேரிடர் ஏற்படுகிறது. இதனால் வறட்சி, நோய் உள்ளிட்ட பிரச்னைகள் உருவாகிறது. வேலையின்மை, இட நெருக்கடி போன்ற சூழல்கள் ஏற்படுகிறது.

தேனி விவசாயம் சார்ந்த மாவட்டம். கடந்த 2001 கணக்கெடுப்பின் படி மாவட்டத்தில், 10 லட்சத்து 93 ஆயிரத்து 950 பேர் இருந்தனர். 2011 கணக்கெடுப்பில் 12 லட்சத்து 45 ஆயிரத்து 899 பேர் உள்ளனர். ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 949 பேர் அதிகரித்துள்ளனர். இந்த மக்கள் தொகைக்கு, தேனி மாவட்டத்தில் விளை நிலங்கள் பிளாட்டுகளாக மாறி விட்டன. வனப்பகுதியில் குடியிருப்புகள் அதிகரித்து விட்டன. தேனி,போடி,சின்னமனூர், கம்பம், ஆண்டிபட்டி உள்ளிட்ட நகரங்களில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ளது. இதனால் நெருக்கமான வீடுகள், பாதை இல்லாத தெருக்கள், மரங்கள், ஜன்னல் இல்லாத வீடுகள் அதிகரித்துள்ளன. இதனால், அப்பகுதியில் சுகாதாரமான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் திண்டாடுகின்றனர். இது போக, ரோடுகளில் வாகன நெரிசல், நகரங்களில் காலை நேரங்களில் டூவீலர்களில் கடந்து செல்வது பெரும் சவாலான விஷயமாக உள்ளது. மக்கள் தொகை பெருக்கத்தால் இது போன்ற பிரச்னைகள் பெரும் சவாலாக உருவெடுத்தாலும், முக்கிய பிரச்னையாக இருப்பது தேனியின் விளைநிலங்கள் பரப்பு குறைந்து வருவது. இதற்கு புள்ளி விவரங்கள் தேவையில்லை. கிராமங்களிலும், நகரங்களிலும் நாம் ரோட்டில் செல்லும் போதே விளை நிலங்களில் கற்கள் வைத்து, கலர்கலராய் கொடிகள் பறப்பதை கண்கூடாக

பார்க்கலாம். தேவதானப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் வறட்சி உள்ளிட்ட காரணங்களால் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர். மக்கள் சக்தியை, வளத்தை திட்டமிட்டு பயன்படுத்தினால் தேனி மாவட்டம் விரைவில் சோலையா மாறும் என்பது உண்மை. இந்த உண்மையை உணர்ந்து தேனி மாவட்டத்தில் உள்ள ஆறுகள், அருவிகள், மலைகள் உள்ளிட்ட இயற்கை வளத்தையும், நாம் பாதுகாக்க வேண்டும். வீடுதோறும் மரங்கள் வளர்க்க வேண்டும்.

தேனி மாவட்ட மக்கள் தொகை

எண் இனம் 2001 2011

சென்சஸ் சென்சஸ்

1. ஆண்கள் 5,52,986 6,25,683
2. பெண்கள் 5,40,964 6,20,216
3. மொத்தம் 10,93,950 12,45,899

**காய்கறி சாகுபடி குறைவால் விலையில் "ஜெட் வேகம்'**

**திருச்சி**: பருவமழை தவறியதால் ஏற்பட்டுள்ள சாகுபடி குறைவால், வெங்காயம் உள்பட காய்கறிகளின் விலை, ஜெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் மாறுப்பட்ட சீதோஷ்ண நிலை காரணமாக, கடந்த ஆண்டு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. நடப்பாண்டும் அதே நிலை தான். இதனால், காய்கறிகள் வரத்து நாளுக்குநாள் குறைந்து வருகிறது. திருச்சி காந்தி மார்க்கெட் மற்றும் உழவர் சந்தைகளுக்கு, கடந்த ஒரு வாரமாக எதிர்பார்த்த அளவில் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படவில்லை. இதனால், காய்கறிகளின் விலை அதிகரித்து வருகிறது. மஹாராஷ்ட்ரா மாநிலம் நாசிக், அகமத் நகர், சோனாப்பூர், கர்நாடகா மாநிலம் பெல்லாரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெரிய வெங்காயம், தமிழகத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. மஹராஷ்ட்ரா மாநிலத்தில், தற்போது பெரிய வெங்காயம் சீஸன் முடிவடை யும் நிலையில் உள்ளதால், வரத்து குறைந்துள்ளது.

கடந்த மாதம், 18 ரூபாய் வரை விற்ற பெரிய வெங்காயம், தற்போது, 28 ரூபாய்க்கு

விற்கிறது. தக்காளி, 25ல் இருந்து, 30 ரூபாய்க்கும், கத்தரி, 40ல் இருந்து, 50 ரூபாய்க்கும், உருளை, 25ல் இருந்து, 30 ரூபாய்க்கும், வெண்டை, 35ல் இருந்து, 40 ரூபாய்க்கும், பீர்க்கங்காய், 45ல் இருந்து, 60 ரூபாய்க்கும், பச்சை மிளகாய், 40ல் இருந்து, 50 ரூபாய்க்கும், முள்ளங்கி, 30ல் இருந்து, 40க்கும், கேரட், 40 ரூபாயில் இருந்து, 60க்கும், பீன்ஸ், 60ல் இருந்து, 80 ரூபாய்க்கும், முட்டை கோஸ், 20ல் இருந்து, 30 ரூபாய்க்கும் விற்கிறது.

செடி முருங்கை, ஒரு கட்டு (25 கொண்டது), 90ல் இருந்து, 110 ரூபாய்க்கும், மர முருங்கை, 75ல் இருந்து, 80க்கும் விற்கிறது. சாதாரண பூண்டு, 90 ரூபாயில் இருந்து, 110 ரூபாய்க்கும், நீலகிரி பூண்டு, 130 ரூபாயில் இருந்து, 140 ரூபாய்க்கும் விற்கிறது.

தினமணி

**மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு வங்கிக் கடன் வழங்க கோரிக்கை**

**செங்கல்பட்டு**:

மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் கடன்கள் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும் என மரம் வளர்ப்போர் சங்கக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தின் இச் சங்கக் கூட்டம் செங்கல்பட்டு வன விரிவாக்க மைய வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, காஞ்சிபுரம் மாவட்ட மரம் வளர்ப்போர் சங்கத் தலைவர் பா.ச.மாசிலாமணி தலைமை தாங்கினார். வன விளம்பர அலுவலர் செல்வம், கருணாநிதி, ஓய்வு பெற்ற ஏசிபி ஆறுமுகம், பழையனூர் மணி, குப்புசாமி, ராமன் உள்ளிட்டோர் மரம் வளர்ப்பதன் பயனும், லாபமும் குறித்து பேசினர். சிறப்பு அழைப்பாளராக பசுமை நாயகன் உமாநாத் கலந்து கொண்டார். மாவட்டத்தில்

அனைத்து கிராமங்களிலும் விவசாயிகள் விருப்பத்துக்கேற்ப மரம் நடவும் அதற்கான அறிவிப்பை வன விரிவாக்க மையம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு வங்கிகள் கடன் வழங்க தமிழக அரசை கேட்டுக் கொள்வது, விவசாயிகள் மண் பரிசோதனை செய்து மண்ணின் தன்மைக்கேற்ப மரக்கன்றுகள் நடவு செய்ய பரிந்துரை செய்தல், மரம் வளர்க்கும் விவசாயிகளுக்கு 5 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் ஊக்கத்தொகை வழங்குதல், நாற்றாங்கால் உற்பத்தியை ஆர்வமுள்ள விவசாயிகளிடம் கொடுத்து மரக்கன்றுகள் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய வருகை தரும் இயற்கை ஆர்வலர் பசுமை நாயகன் உமாநாத்தின் பயணக் குழுவை சங்கத்தின் அங்கத்தினர்கள் வரவேற்று அவர்களது சுற்றுப்பயணம் வெற்றி பெற வாழ்த்தி வரவேற்றனர்.

கூட்டத்துக்கான ஏற்பாடுகளை காஞ்சிபுரம் மாவட்ட மரம் வளர்ப்புச் சங்கம் மற்றும் செங்கல்பட்டு வனவிரிவாக்க மையமும் செய்தன.

## ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் தக்காளி விலை உயர்வு

**ஒட்டன்சத்திரம்:**
ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் தக்காளி விலை உயர்ந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தை தமிழகத்திலேயே மிகப்பெரிய சந்தையாகும். இந்த சந்தைக்கு, ஒட்டன்சத்திரத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் இருந்தும் பல தரப்பட்ட காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. 2 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துவிட்டதால், காய்கறிகளின் வரத்து முற்றிலும் குறைந்துவிட்டது. இதனால், கடந்த சில மாதங்களாக காய்கறி சந்தை களையிழந்து காணப்படுகிறது.

கேரளத்தினர் அதிகம் விரும்பி உண்ணும் காய்கறிகளான வெண்டைக்காய், கத்தரிக்காய் போன்றவை ஆண்டிப்பட்டி, தேனி, கம்பம் ஆகிய பகுதிகளில் இருந்தும், முருங்கைக்காய் தாராபுரம், திருநெல்வேலி, உடன்குடி ஆகிய பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. இதனால்,

இன்னும் சில நாள்களில் காய்கறிகளின் விலை பல மடங்கு உயரக்கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், வியாழக்கிழமை காய்கறி சந்தையில் 14 கிலோ கொண்ட ஒரு பெட்டி தக்காளி ரூ. 340 வரை விற்பனையானது. அதேபோல், மற்ற காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு:

பல்லாரி வெங்காயம் ரூ. 30, சின்னவெங்காயம் ரூ. 30, வெண்டைக்காய் ரூ. 24, சுரைக்காய் ரூ. 10, பூசணி (சுனாமி) ரூ. 10, பூசணி (நாட்டு ரகம்) ரூ. 14.50, கொத்தவரை ரூ. 15, மாங்காய் (கல்லாமை) ரூ. 16, மாங்காய் (உருட்டு) ரூ. 11, வாழை நாட்டு ரகம் ரூ. 16, நெல்லிக்காய் ரூ. 33, சௌசௌ ரூ. 30, நார்த்தக்காய் ரூ. 60, அவரை (பட்டை, பெல்ட்) ரூ. 57, கோழி அவரை ரூ.35 வரை விற்பனையானது.

## உற்பத்தியில் சாதனை படைத்த விவசாயிகளுக்கு ஆட்சியர் பாராட்டு

**திண்டுக்கல்**:

நிலக்கடலை மற்றும் மக்காச்சோளம் சாகுபடியில், அதிகபட்ச உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு, ரொக்கப் பரிசு வழங்கி மாவட்ட ஆட்சியர் பாராட்டுத் தெரிவித்தார்.

வேளாண்மை துறை சார்பில், விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டது. இதில் நிலக்கடலை மற்றும் மக்காச்சோளப் போட்டியில் வெற்றி பெற்ற வேடசந்தூர் மற்றும் பழனி பகுதி விவசாயிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் ரொக்கப் பரிசு வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

சாதனை படைத்த விவசாயிகள்:

ஒரு ஹெக்டேரில் அதிகபட்சமாக 6800 கிலோ நிலக்கடலை உற்பத்தி செய்த வேடசந்தூர் அடுத்துள்ள தொட்டணம்பட்டியைச் சேர்ந்த ரா.அய்யப்பனுக்கு முதல் பரிசாக ரூ.15 ஆயிரமும், 5720 கிலோ நிலக்கடலை உற்பத்தி செய்த வேடசந்தூர் அடுத்துள்ள காமணம்பட்டி பெ. சுப்பையாவுக்கு ரூ.10 ஆயிரமும் வழங்கப்பட்டது.

இதேபோல் மக்காச்சோளம் பயிர் உற்பத்தில் ஹெக்டேருக்கு 27,180 கிலோ சாகுபடி செய்த பழனி அடுத்துள்ள பாலசமுத்திரத்தைச் சேர்ந்த செ. ராமசாமிக்கு

ரூ.10 ஆயிரமும், அதே பகுதியைச் சேர்ந்த மா. ராம்குமாருக்கு 26,320 கிலோ உற்பத்தி செய்ததற்காக ரூ. 5 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட்டது.

இதுகுறித்து விவசாயிகள் ரா. அய்யப்பன் மற்றும் மா.ராம்குமார் ஆகியோர் தெரிவித்தது:

இதுவரை முறையான வழிகாட்டுதலின்றி, உரங்களை பயன்படுத்தி வந்தோம். தற்போது முதல் முறையாக, வேளாண்மைத் துறை அதிகாரிகள் வழிகாட்டுதலும் இந்த வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது.

பயிருக்குத் தேவையான உரங்களை சரியான விகிதத்தில் பயன்படுத்தியதாலும், அடி உரமாக தொழு உரத்தினை பயன்படுத்தியதாலும், அதிகபட்ச உற்பத்தி சாத்திமானது என்றனர்.

## திவாடானையில் விவசாயிகள் சங்கக் கூட்டம்

**திருவாடானை:**

திருவாடானையில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் முத்துராமு, தாலுகா தலைவர் ராசு, தாலுகா செயலர் நாகநாதன், விவசாய தொழிலாளர்கள் சங்க தாலுகா செயலர் குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து வறட்சி ஏற்பட்டுள்ளதால், ராமநாதபுரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணம் வழங்க வேண்டும். வறட்சியால் பாதிக்கபட்ட விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீடு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.

மாவட்டத்தில் உள்ள ஆயிரத்துக்கும் அதிகமான கண்மாய்கள், குளங்கள் தூர்வாரப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

<u>மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி</u>

**அரக்கோணம்**:

தக்கோலத்தில் பேரூராட்சி சார்பில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் சுமா தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்றத் தலைவர் நாகராஜன் பேரணியை துவக்கி வைத்தார். இதில் மன்ற உறுப்பினர்கள் முகமது காசிம், சுதாகர், நடராஜன், குருநாதன், நிர்மலா உள்ளிட்டோர் பங்கேற்றனர். பேரணியில் பேரூராட்சிப் பணியாளர்களுடன் தக்கோலம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் கலந்துகொண்டு நகரம் முழுவதும் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு தொடர்பான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

<u>**18-**ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

**திருவண்ணாமலை**:

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், இம் மாதம் 18-ம் தேதி நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமையில் இக் கூட்டம் நடைபெறுகிறது. இதில், அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகள், புகார்களுக்கு பதில் அளிக்க உள்ளனர்.

இக் கூட்டத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை இம் மாதம் 14-ம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பலாம்.

மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் தங்களது கோரிக்கை மனுக்களைப் போடலாம்.

மனுக்கள் மீதான நடவடிக்கைகள் குறித்த விவரம் குறைதீர் கூட்டத்தில்

தெரிவிக்கப்படும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**<u>வேளாண் இடுபொருள்கள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு</u>**

**ஒரத்தநாடு**:

குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தின் கீழ், 2014-15-ம் ஆண்டுக்கான குறுவை சாகுபடி விவசாயிகளுக்கு இலவச வேளாண் இடுபொருள்கள் வழங்கப்படவுள்ளன. இதை விவசாயிகள் பெற்று பயன்பெற வேண்டும் என்று ஒரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குநர் பாலசரஸ்வதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

ஒரத்தநாடு வேளாண்மை கோட்டத்துக்குள்பட்ட கிராமங்களில் குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் விதத்திலும் குறுவை நெற்பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையிலும் விவசாயிகளுக்கு 100 சத மானியத்தில் நெல் நுண்ணூட்டக் கலவை, துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்கப்படுகிறது.

ஒரத்தநாடு வட்டாரத்தில் 3,150 ஏக்கர் நெல் நுண்ணூட்டம் மற்றும் துத்தநாக சல்பேட் வழங்க இடுபொருட்கள் பெறப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுண்ணூட்டம், 10 கிலோ துத்தநாக சல்பேட் வழங்கப்படும். மேலும் 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம், 4 பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா வழங்கப்படும். உயிர் உரம் 1,400 ஏக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு ஏக்கருக்கும் 350 மில்லி அசோஸ்பைரில்லம், 350 மில்லி பாஸ்போ பாக்டீரியா வழங்கப்படும்.

மேலும், களர் நிலமாக இருந்தால் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் வழங்கப்படும்.

ஒவ்வொரு விவசாயிகளுக்கும் 5 ஏக்கருக்கு மட்டுமே இலவச இடுபொருட்கள் வழங்கப்படும்.

சொந்த நீர் ஆதாரம் உள்ள குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமே உயிர் உரங்கள் வழங்கப்படும்.

எனவே, குறுவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், ஒரத்தநாடு வேளாண்மை விரிவாக்க மையத்துக்கு வந்து அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் உதவி அலுவலர்களிடம் விண்ணப்பம் பெற்று இடுபொருட்கள் எடுத்து கொள்ளலாம் என்று அந்த அறிக்கையில் வேளாண் உதவி இயக்குநர் பாலசரஸ்வதி தெரிவித்துள்ளார்.

**சோலார் பம்ப்செட் அமைக்க 80% மானியம்**

**விழுப்புரம்:**

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், சோலார் மோட்டார் பம்ப்செட் அமைக்க, விவசாயிகளுக்கு 80 சதவீதம் மானியமாக வழங்கப்படும் என்று ஆட்சியர் வா.சம்பத் தெரிவித்தார்.

தேசிய நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வயல்களில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதில் உள்ள பணி முன்னேற்றம் மற்றும் நிறுவனங்களில் மானியம் வழங்குவது ஆகியவை குறித்து விழுப்புரம் ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது அவர் கூறியது: விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 76 பயனாளிகளுக்கு நுண்ணீர் பாசனத்துடன் கூடிய சூரிய சக்தியில் இயங்கும் சோலார் பம்ப்செட் அமைக்க இந்த ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சூரிய சக்தியில் இயங்கும் சோலார் மோட்டார் பம்ப்செட் அமைக்க ஆகும் தொகை ரூ.4,39,950-ல் மானியமாக ரூ.3,35,200 வழங்கப்படுகிறது. இத் திட்டத்தில் பயன்பெறும் விவசாயி பங்குத் தொகையாக ரூ.1,04,750 செலுத்தினால் போதுமானது என்றார்.

பின்னர் இதனைத் தொடர்ந்து, காணை ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் கிராமத்தில் ராமன் என்பவரது விவசாய நிலத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சூரிய சக்தியில் இயங்கும் சோலார் பம்ப்செட் அமைக்கப்பட்டதை பார்வையிட்டார்.

விழுப்புரத்தில் இத் திட்டத்தை செயல்படுத்த அலர்டரோனா எனர்ஜி பிரைவேட்

லிட், சென்னை, ஜெயின் இரிகேஷன் சிஸ்டம் லிட், ஜல்கான், ரிச் பைட்டோ கேர், போடிநாயக்கனூர், மற்றும் சாய் பாபுஜி பிரைவேட் லிட், ஹைதராபாத் ஆகிய 4 நிறுவனங்கள் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்துக்கு தமிழ்நாடு மாற்று எரிசக்தி முகமை மூலம் 30 சதவீதம் மானியமும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 50 சதவீத மானியமும் என மொத்தம் 80 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்றார்.

ஆய்வின்போது விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பி.ராஜாமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வி.ஆறுமுகம், வேளாண்மை துணை இயக்குநர் செல்வசேகர், வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் குருமூர்த்தி உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## <u>விவசாயிகளுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி</u>

**காரைக்கால்**:

காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையத்தில் தேனீ வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி புதன்கிழமை நடைபெற்றது.

காரைக்கால் மாவட்டம், மாதூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற பயிற்சியில் காரைக்கால் மற்றும் சுற்றுவட்டார மாவட்ட விவசாயிகள், மகளிர், வேளாண் கல்லூரி மாணவ மாணவிகள், ஓய்வுபெற்ற அரசுப் பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர். பயிற்சியை வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ஆ. சுரேஷ் தொடக்கி வைத்தார்.

புதுக்கோட்டையில் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் வி. தமிழ்ச்செல்வன் பயிற்றுநராக கலந்துகொண்டு பேசியது:

தேனீயில் இந்திய தேனீ, இத்தாலி தேனீ, கொசுத் தேனீ, மலைத்தேனீ, கொம்புத்

தேனீ என்ற வகைகள் உள்ளன. மலைத்தேனீ, கொம்புத் தேனீயை நாம் வளர்க்க முடியாது. அவை சேகரித்த தேனை கூட்டிலிருந்து நாம் அறுவடை செய்துகொள்ளலாம். மற்றவற்றை நாம் பெட்டியில் வைத்து வளர்க்க முடியும்.

ஒவ்வொரு தேனீ குடும்பத்திலும் ஒரு ராணி தேனீ, நூற்றுக்கணக்கில் ஆண் தேனீக்களும், ஆயிரக்கணக்கில் வேலைக்காரத் தேனீக்களும் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை பணிகளை செய்கின்றன என்றார்.

பயிற்சியாளர்கள் கிருஷ்ணன், அற்புதராஜ் ஆகியோர் தேனீ வளர்ப்பின் மூலம் கிடைக்கும் வருவாய், வளர்ப்பு முறை குறித்து தங்களது அனுபவங்களை விளக்கினர்.

வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் ந. ராஜேந்திரன், தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்புவோர் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகி விவரங்களை தெரிந்து கொள்ளலாம் என்றார். பயிற்சியில் பங்கேற்றோருக்கு தேனீ வளர்ப்பு குறித்து விளக்கும் குறுந்தகடுகள் வழங்கப்பட்டன. வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப வல்லுநர் சுமதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**நபார்டு வங்கியின் மூலமாக நிலம் இல்லாத 5 லட்சம் விவசாயிகளுக்கு நிதி**



நபார்டு வங்கியின் மூலமாக நிலம் இல்லாத விவசாயிகள் 5 லட்சம் பேருக்கு நிதி

வழங்கப்படும்.

நீர்ப்பாசன வசதி

பாராளுமன்றத்தில் நிதி மந்திரி அருண்ஜெட்லி நேற்று தாக்கல் செய்த மத்திய பட்ஜெட்டில், விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள், சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:–

* விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியைப் பெருக்கும் வகையில் 'பிரதம மந்திரி கிரிஷி சீச்சாய் யோஜனா' திட்டத்தின் கீழ் பட்ஜெட்டில் ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தனி டி.வி. சேனல்

* விவசாயிகளுக்கு தேவையான சாகுபடி, மகசூல், வேளாண் விளைபொருட்கள் சந்தையிடல் பற்றிய தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கு என கிஷான் டி.வி. என்ற பெயரில் தூர்தர்ஷன் சார்பில் புதிதாக ஒரு டி.வி. சேனல் தொடங்கப்படுகிறது. இது ரூ.100 கோடியில் உதயம் ஆகிறது. இதே போன்று சமுதாய வானொலிகள் நிறுவவும் ரூ.100 கோடி ஒதுக்கப்படுகிறது.

வேளாண் கட்டமைப்பு நிதியம்

* கிராமப்புறங்களுக்காக தேசிய கிராமப்புற இணைய தளம் மற்றும் தொழில் நுட்பத்திட்டம் ரூ.500 கோடியில் செயல்படுத்தப்படும்.

* வேளாண் கட்டமைப்பு நிதியம் ஒன்று ரூ.100 கோடியில் நிறுவப்படுகிறது.

* ஜார்கண்ட், அசாம் மாநிலங்களில் தலா ஒரு வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்படும்.

* ஆந்திரா, ராஜஸ்தான் மாநிலங்களில் தலா ஒரு விவசாய பல்கலைக்கழகமும், அரியானா, தெலுங்கானாவில் தலா ஒரு தோட்டக்கலை பல்கலைக்கழகமும் நிறுவப்படும்.

* ஒவ்வொரு விவசாயிக்கும் மண் அட்டை வழங்கப்படும். இதற்காக ரூ.100 கோடி ஒதுக்கப்படுகிறது. மண் பரிசோதனைக்கூடங்கள் அமைப்பதற்கு ரூ.50 கோடி ஒதுக்கப்படுகிறது.

5 லட்சம் பேருக்கு நிதி

* புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, 4 சதவீத வேளாண் வளர்ச்சிக்கு அரசு திட்டமிட்டுள்ளது.

* நபார்டு வங்கியின் மூலமாக நிலமில்லா விவசாயிகள் 5 லட்சம் பேருக்கு நிதி வழங்கப்படும்.

* உள்நாட்டு கால்நடை இனப்பெருக்கத்துக்கும், மீன் வளம் பெருக்க நீலப்புரட்சிக்கும் ரூ.50 கோடி ஒதுக்கப்படுகிறது.

இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளன.

**<u>பட்ஜெட்டில் விவசாயத்துக்கு ரூ.7,500 கோடி ரூ.8 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு</u>**



**புதுடெல்லி**

மத்திய நிதி மந்திரி அருண் ஜெட்லி தாக்கல் செய்த பட்ஜெட்டில் விவசாயத்துக்கு ரூ.7,500 கோடி மதிப்பிலான திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் முக்கியமானவை:–

* கடன்களை சரியாக வங்கியில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவீத வட்டி பண உதவி திட்டம் தொடரும்.

* விவசாயத்துக்கு ரூ.8 லட்சம் கோடி கடன் வழங்க இலக்கு

நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

* பருவ நிலை மாற்றம் சவாலாக அமைந்தாலும் இரண்டாவது பசுமைப்புரட்சி காணும் வகையில், புதிய வேளாண் சாகுபடி தொழில்நுட்பங்கள் புகுத்தப்படும்.

**ரூ.20 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**



நாமக்கல் கூட்டுறவு சங்க வளாகத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றபோது எடுத்தபடம்.

நாமக்கல்லில் நேற்று 900 மூட்டை பருத்தி ரூ.20 லட்சத்துக்கு ஏலம் போனது. பருத்தி ஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னி லையில் பருத்தி ஏலம் நடந் தது.

இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 900 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

ரூ.20 லட்சத்துக்கு ஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ரூ.20 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 800 முதல் ரூ.5 ஆயிரத்து 300 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி ரூ.5 ஆயிரத்து 800 முதல் ரூ.6 ஆயிரத்து 300 வரைக்கும், சுரபி ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 700 முதல் ரூ.7 ஆயிரத்து 295 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

தினகரன்

**<u>கோவை மாவட்டத்தில் மழை நீரை தேக்கி வைக்க 1400 பண்ணை குட்டைகள்</u>**

**கோவை**, : கோவை மாவட்டத்தில் மழை நீரை தேக்க 1400 பண்ணை குட்டை அமைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது.

கோவை மாவட்டத்தில் 3.15 லட்சம் எக்டரில் விவசாய நிலப்பரப்பு இருக்கிறது. கடந்த ஆண்டில் 1.71 லட்சம் எக்டரில் விவசாயம் நடந்தது. இதில் சுமார் 40 சதவீத விளைபயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டது. குறிப்பாக 49 ஆயிரம் எக்டரில் தென்னை மரங்கள் காய்ந்து போனது. சிறு தானியங்களும் அதிகளவு வறட்சியால் பாதிக்கப்பட்டது. வறட்சியை தவிர்க்க, மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பண்ணை குட்டை திட்டம் துவக்கப்பட்டது. கடந்த ஆண்டில், மாவட்ட அளவில் 1100 இடத்தில் பண்ணை குட்டை அமைக்கும் திட்டம் கடந்த ஆண்டில் துவக்கப்பட்டது. ஒரு பண்ணை குட்டை அமைக்க 2 லட்ச ரூபாய் முதல் 3 லட்ச ரூபாய் வரை செலவிடப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் 1200 பண்ணை குட்டைகள் 22 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டது. ஆனால் இந்த குட்டைகளில் மழை நீர் இதுவரை தேங்கவில்லை. வடிகால் எல்லைகளில் நீர் தேங்கும் வகையில் அமைந்த இந்த குட்டைகள் மழை நீருக்காக காத்திருக்கிறது.

நடப்பாண்டில் 1400 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. 12 ஒன்றியங்களில் நீரோடை, பள்ளங்களில் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. 3 மாதத்தில் பணிகள் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. பண்ணை குட்டை அமைக்க தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட தொழிலாளர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

வேளாண்மை துறையினர் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''1.5 மீட்டர் ஆழத்தில் 15 மீட்டர் நீள, அகலத்தில் பண்ணை குட்டை அமைக்கப்படுகிறது. 100 வேலை திட்டத்தில் உள்ள தொழிலாளர்களுக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக தொழிலாளர்களுக்கு கூலி வழங்கப்படுகிறது. விவசாயிகளும் தங்கள் விளை நிலத்தில் மானிய தொகையில் பண்ணை குட்டை எளிதாக அமைக்கலாம். 50 சென்ட் இடம் இருந்தால் தாழ்வான இடத்தில் பண்ணை குட்டை அமைக்க முடியும். மழை நீர் முழுவதும் இந்த குட்டையில் தேங்கும் வகையில் இந்த குட்டை உருவாக்க முடியும். குட்டையின் அடிப்பாகத்தில் களிமண் போட்டு தளம்

அமைக்கலாம். இதன் மூலமாக அதிக நீரை சேமிக்க முடியும். இந்த குட்டையில் இருந்து மோட்டார் வைத்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யலாம். குட்டையில் கெண்டை, ஜிலேபி, கட்லா, ரோகு போன்ற மீன்களை வளர்க்கலாம். ஒரு குட்டையில் பல லட்ச லிட்டர் நீரை தேக்கி வைக்க முடியும். குறைந்தபட்ச மழை பெய்தால் கூட போதும் ஆண்டு முழுவதும் பண்ணை குட்டையை நம்பி விவசாயம் செய்ய முடியும். இதன் மூலமாக விவசாய பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்படுவதை வெகுவாக தவிர்க்க முடியும்,'' என்றனர்.

**ஜூலை 18ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

**சிவகங்கை**, : சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 18ம் தேதி காலை 10.30 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது.

கலெக்டர் தலைமை யில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல் வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவ தும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசா யம் சார் ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர் த்தி செய்து கொள்ளலாம்.

ரேஷன் குறைதீர் கூட் டம்: சிவகங்கை மாவட்டத் தில் ரேஷன் நுகர்வோர் குறைதீர் கூட்டம் நாளை மறுநாள் (ஜூலை 12) நடக்கிறது.

சிவகங்கை தாலுகா சுந்தரநடப்பு, இளையான் குடி தாலுகா கோட்டையூர், காரைக்குடி தாலுகா நேம த்தான்பட்டி, தேவ கோட் டை தாலுகா கோபாலபுரம், திருப்புத்தூர் தாலுகா வடக்கு இளையாத்தங்குடி, திருப்புவனம் தாலுகா தேளி ஆகிய இடங்களில் காலை 10 மணிக்கு துணை கலெக் டர் நிலையிலான மண்டல அலுவலர்கள் முன்னிலையில் இக்கூட்டம் நடக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட வட்ட வழ ங்கல் அலுவலர்கள் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்கள் கலந்து கொள்கின்றனர். இதில் ரேஷன்கார்டுதாரர்கள் கலந்து கொண்டு ரேஷன் விநியோக திட்டம் தொடர்பான தங்களது குறைகளை தெரிவித்து தீர்வு பெறலாம்.

**மிளகாய் சாகுபடியில் அதிக விளைச்சல் பெற வழிமுறை வேளாண் உதவி இயக்குனர் தகவல்**

**கடலூர்**, : கடலூர் ஒன்றிய விவசாயிகள் ஜூன், ஜூலை மற்றும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் மிளகாய் சாகுபடி செய்கின்றனர். இதில் கே1, கே2, கோ1, கோ2,

பிகேம்1, பாலூர்1 ஆகிய 5 வகையான மிளகாய் ரகம் உள்ளது. சாகுபடி செய்வதற்கு மண் மற்றும் தட்பவெட்ப நிலை நல்ல வடிகால் வசதி உள்ள வண்டல் மண் மிகவும் ஏற்றது.

வெப்பமான பருவநிலை போதுமான அளவு மண்ணில் ஈரப்பதத்தில் இப்பயிர் நன்கு வளரும். இப்பயிர் 160 நாட்கள் விலையும். ஒரு எக்டேர் பரப்புக்கு ஒரு கிலோ விதை போதும். ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது காப்டான் 2 கிராம் அல்லது டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் விதைகளுடன் கலந்து 24 மணி நேரம் வைத்து பின் விதைக்க வேண்டும். அசோஸ் பைரில்லம் 400 கிராம் விதை நேர்த்தி செய்வதால் தலை சத்தின் தேவையை 25 சதவீதம் வரை குறைக்கலாம்.

மேலும் நடவுமுறைகள் 1.5 சென்ட் பரப்பில் மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைத்து நாற்று தயாரித்து 40, 45 நாட்கள் வயதுடைய நாற்றுகளை குத்துக்கு 2 நாற்றுகள் வீதம் நடவேண்டும்.

நாற்று நடும் போது இடைவெளியாக 45க்கு 30 செ.மீ. மற்றும் 30க்கு 15 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இதற்கு தொழு உரம் 25 டன், யூரியா 30 கிலோ, சூப்பர் பாஸ்போட் 60 கிலோ, முயூரேட் ஆப்பெட்டாஸ் 20 கிலோ என இவை அனைத்தும் அடி உரமாக இட வேண்டும். 30 கிலோ யூரியா முறையே 30, 60, 90 ஆகிய நாட்களில் மேல் உரமாக இட வேண்டும்.

கலைக் கட்டுப்பாடுகள்: நட்ட மூன்றாம் நாள் எக்டேருக்கு புளுகுயோரலின் ஒரு கிலோ மருந்து 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். நட்ட 45ம் மண் அனைத்து கலையெடுக்க வேண்டும். பூக்கள், பிஞ்சுகள், தடுக்கவும், பூக்கள் விடுவதை தூண்டவும் நட்ட 60 அல்லது விதைத்த 100வது நாளில் ஒரு முறையும் மேலும் 30 நாட்களுக்கு பிறகு ஒரு முறையும் என்ஏஏ பயிர் ஊக்கியினை என 10 மில்லி லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

மேலும் டிரைகான்டினால் 1.25 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதனால் மிளகாய் 200 கிலோ மகசூல் அதிகரிக்கலாம்.

பயிர் பாதுகாப்பு முறைக்கு சாரு உரிஞ்சும் பூச்சிகள் நட்ட 15ம் நாள் முதல் ரோகார் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி வீதம் அல்லது மீத்தேன் டெமோடான் 2 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

சாம்பல் நோய்க்கு நனையும் கந்தகம் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். காய் அழுகல் நோய்க்கு டைதேன் எம்45, 2 கிராம் வீதம் ஒரு

லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 75ம் நாளில் பச்சை காய்கறிகளை அறுவடை செய்யலாம். இதனால் அதிகபடியான மிளகாய் சாகுபடி செய்யலாம். இத்தகவலை வேளாண்மை உதவி இயக்குநர் வீரமணி தெரிவித்துள்ளார்.

**குறுவை சாகுபடி விவசாயிகளுக்கு 100% மானியத்தில் இடுபொருட்கள் இன்றும், நாளையும் விநியோகம்**

**கொள்ளிடம்**, : நாகை மாவட்டம் கொள்ளி டம் வட்டார விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் இன் றும், நாளையும் வேளாண் இடுபொருட்கள் வாங்கி பயன்பெறலாம்.

இதுகுறித்து கொள்ளி டம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: தமிழக முதல்வரின் குறுவை தொகுப்பு சாகுபடி திட்டத்தில் 100 சதவீத மானியத்தில், வேளாண் இடுபொருட்களான நெல் நுண்ணூட் டம் 5 கிலோ, சிங் சல்பேட் 5 கிலோ, ஜிப் சம் 200 கிலோ, உயர் உரங் கள் (அசோஸ் பைரில்லம் 4 பாக் கெட்) பாஸ்போ பாக்டீரியா 4 பாக்கெட், திரவ உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் 350 மிலி, பாஸ்போபாக்டீரியா 350 மிலி மற் றும் வயலில் நீர் இறைக்க, நீர் கொண்டு செல்லும் குழாய் கள் உள்ளிட்ட பொருட்கள் 100 சதவிகித மானியத்தில், குறுவை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மட்டும் விநியோகம் செய்யப்பட உள்ளது. முதல் கட்டமாக நெல் நுண்ணூட்டம், உயர் உரங்கள் மற்றும் திரவ உயிர் உரங்கள் ஆகியவை, பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களான கொள்ளி டம், எருக்கூர் மற்றும் கட வாசல் மூலம் இன்றும், மற் றும் நாளையும் (11ம்தேதி) இரண்டு நாட்கள் விநியோ கம் செய்யப்பட உள்ளது.

குறுவை சாகுபடி செய்த விவசாயிகள் சம்மந்தப்பட்ட பகுதி உதவி வேளாண் அலுவலரை தொடர்பு கொண்டு வேளாண்மை விரிவாக்க மையங்களில் விண்ணப்பம் பெற்று 100 சதவிகித மானியத்தில் இடுபொருட் களை பெற்று பயன்பெறலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் கூறினார்.

**காய்கறிகளின் விலையேற்றத்தால் பொதுமக்கள் பாதிப்பு**

**கூடலூர்**, : காய்கறிகளின் தொடர் விலையேற்றத்தால், பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.பருவமழை தவறியதால், நிலத்தடி நீர் குறைந்ததால், தோட்டங்களில் காய்கறி உற்பத்தி குறைந்ததுள்ளது. இதனால், சந்தைகளில்

காய்கறிகளின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. இந்த தொடர் விலையேற்றம் கூலித்தொழிலாளர்களையும் நடுத்தர மக்களையும் மிகவும் பாதித்துள்ளது. கம்பம் உழவர்சந்தையில் நேற்று காய்கறிகளின் விலைவிபரம் (1 கிலோ ரூபாயில்) பட்டர் பீன்ஸ் 120, கொத்தமல்லி 100, தக்காளி 32, அவரைக்காய் - 45, பச்சைமிளகாய் - 40-44, என அனைத்து காய்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது. இதுகுறித்து உழவர்சந்தைக்கு வந்த பெண் ஒருவர் கூறுகையில், 'கடந்த ஒருமாதகாலமாக வெளிச்சந்தைகளில் காய்கறிகளின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. உழவர்சற்தை அதிகாரிகளின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ளதால் விலைகள் வெளிச்சந்தையைவிட ஓரளவு குறைவாக உள்ளது. இருந்தாலும் கடந்த இருமாதங்களின் காய்கறிகளின் விலை இருமடங்கு அதிகரித்துள்ளது. இது பொதுமக்களை மிகவும் பாதித்துள்ளது' என்றார்.

## விவசாயிகள் நலன் கருதி ரூ. 1 கோடியில் 21 இடங்களில் தேயிலை கொள்முதல் மையங்கள்

**மஞ்சூர்**, : தேயிலை விவசாயிகள் நலன் கருதி கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் 21 இடங்களில் தேயிலை கொள்முதல் மையம் மற்றும் உரக்கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் மஞ்சூரில் தென்னிந்திய தேயிலை வாரியத்தின் சார்பில் மண்டல அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு தேயிலை வாரிய இணை இயக்குனர் ஹரிபிரசாத் தலைமை தாங்கினார்.

தேயிலை வாரிய முன் னாள் தலைவர் ரங்கையா, கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை மேலாண் இயக்குனர்கள் அருணாச்சலம் (மஞ்சூர்) பாலசுப்ரமணியம் (மகாலிங்கா) ராஜேந்திரன் (மேற்குநாடு) ஆகி யோர் முன்னிலை வகித்தனர்.

குந்தா மண்டல கூடுதல் இயக்குனர் ரமேஷ் வரவேற்றார். விழாவில் தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் மண்டல அலுவலகத்தை திறந்து வைத்தார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:

குந்தா பகுதியில் சுமார் 4 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பகுதியை சேர்ந்த தேயிலை விவசாயிகள் நலன்

கருதியும் அவர்களின் கோரிக்கையை ஏற்று தேயிலை வாரியத்தின் மண்டல அலுவலகம் மஞ்சூரில் திறக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் குந்தா வட்டார பகுதியை சேர்ந்த சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை வாரியத்தின் பணிகளுக்காக குன்னூருக்கு சென்று வர தேவையில்லை. தேயிலை வாரியத்தின் திட்டங்கள், சலுகைகள் அனைத்தும் புதிய அலுவலகத்தின் மூலமாகவே விவசாயிகள் பெற்று பயன் பெறலாம்.

தென்னிந்திய தேயிலை வாரியத்தின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தேயிலை விவசாயிகள் நலனுக்காக 21 இடங்களில் பசுந்தேயிலை கொள்முதல் மையங்கள் மற்றும் உரக்கிடங்குகள் திறக்கப்பட்டுள்ளன.

மாவட்டம் முழுவதும் இதுவரை 45 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை வாரியத்தில் பதிவு செய்துள்ளார்கள். இதில் 10 ஆயிரம் விவசாயிகளுக்கு பயோமெட்ரிக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. வருங்காலத்தில் தேயிலை வாரியத் தின் மூலம் வழங்கப்படும் திட்டங்கள் மற்றும் சலுகை கள் அனைத்தும் பயோமெட்ரிக் கார்டுகள் மூல மாகவே வழங்கப்படும்.

விவசாயிகள் மற்றும் அவர்களது தோட்டங்களின் விவரங்கள் அனைத் தும் இந்த கார்டில் இடம் பெற்றிருக்கும் என்பதால் அனைத்து விவசாயிகளுக் கும் இந்த கார்டுகள் படிப்படியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேயிலையில் கலப்படம் செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக மாவட்டம் முழுவதும் தேயிலை தொழிற்சாலைகள் கண்காணிக்கப்பட்டு வரு கிறது.

இவ்வாறு செயல் இயக்குனர் அம்பலவாணன் தெரிவித்தார்.

விழாவில் கண்கானிப்பாளர் தியாகராஜன், தொழிற்சாலை மேம்பாட்டு அலுவலர்கள் கார்த்திகேயன், சஜீவன், குந்தே சிறு தேயிலை விவசாயிகள் சங்க நர்வாகிகள் மகாமகாபெள்ளியப்பன், ராணி, கட்லாடா விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பத்ரன், கண்ணையன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

முடிவில் தர மேம்பாட்டு அலுவலர் விவேக் நன்றி கூறினார். முன்னதாக தேயிலை வாரியத்தின் மூலம் கோடேரி, மந்தனை, ஸ்ரீராம்நகர், பிக்கட்டி பாரதியார் புதூர் பகுதிகளில் கட்டப்பட்ட புதிய பசுந்தேயிலை கொள்முதல் மையங்கள் மற்றும் உரக்கிடங்குகளை செயல் இயக்குனர் அம்பலவாணன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் சம்மந்தப்பட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

**ஒரத்தநாட்டில் குறுவை சாகுபடி விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்கள் பயன்பெற அழைப்பு**

**ஒரத்தநாடு**, : ஒரத்தநாடு பகுதியில் முதல்வரின் குருவை தொகுப்பு திட்டம் 2014-15 ஆண்டுக்கான குருவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு இலவச இடுபொருட்கள் வழங்கப்படுகிறது.ஒரத்தநாடு வேளாண் மை உதவி இயக்குனர் பாலசரஸ்வதி தெரிவித்துள்ளதாவது:ஒரத்தநாடு வேளாண் மை கோட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் குருவை சாகுபடியை ஊக்குவிக்கும் விதத்திலும், குருவை நெற்பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தி திறனை பெருக்க அறிவிக்கப்பட்ட திட்டமானது சரியான தருணத்தில் நடவு செய்ய நிலத்தடி நீரை உபயோகித்து விதை விட்டு நாற்றங் கால் அமைக்க வேண்டும். குருவை சாகுபடி செய் துள்ள விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியத்தில் நெல் நுன்னூட்டம், உயிர் உரங்கள், துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் வழங்கப்படுகிறது. இவற்றை உபயோகித்து உற்பத்தி திறனை பெருக்க வேண்டும். மேலும் நடவின்போது அடி உரம் இட வேண்டும். ஒரத்தநாடு வட்டாரத்தில் 3,150 ஏக்கர் நெல் நுன்னூட்டம் மற்றும் துத்தநாக சல்பேட் வழங்க இடுபொருட்கள் பெறப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு 5 கிலோ நெல் நுன்னூட்டம், 10 கிலோ துத்தநாக சல்பேட் வழங்கப்படும். மேலும் 4 பாக்கெட் அசோஸ்பைரில்லம், 4 பாக்கெட் பாஸ் போ பாக்டீரியா வழங்கப்படும். உயிர் உரம் 1,400 ஏக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு ஏக்கருக்கும் 350 மில்லி அசோஸ்பைரில்லம், 350 மில்லி பாஸ்போ பாக்டீ ரியா வழங்கப்படும். மேலும் களர் நிலமாக இருந்தால் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் வழங்கப்படும். ஒவ்வொரு விவசாயிகளுக்கும் 5 ஏக்கருக்கு மட்டுமே இலவச இடுபொருட்கள் வழங்கப்படும். சொந்த நீர் ஆதாரம் உள்ள குருவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமே உயிர் உரங்கள் வழங்கப்படும். எனவே குருவை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், ஒரத்தநாடு வேளாண்மை விரிவாக்க மையத்துக்கு வந்து அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் உதவி அலுவலர்களிடம் விண்ணப்பம் பெற்று இடுபொருட்கள் எடுத்து கொள்ளலாம். இவ்வாறு ஒரத்தநாடு வேளாண்மை உதவி இயக்குனர் பாலசரஸ்வதி தெரிவித்துள்ளார்.

## தஞ்சையிலிருந்து சேலத்துக்கு 1,250 டன் அரிசி அனுப்பப்பட்டது

**தஞ்சை**, : தஞ்சையிலிருந்து சேலத்துக்கு ரயில் மூலம் 1,250 டன் புழுங்கல் அரிசி அனுப்பப்பட்டது.

பொதுவிநியோக திட்டத்துக்காக தஞ்சையில் மத்திய சேமிப்பு கிடங்குகளில் சேமிக்கப்பட்டுள்ள அரிசி, தேவைப்படும் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதன்படி தஞ்சையிலிருந்து நேற்று 120 லாரிகளில் தஞ்சை ரயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்ட அரிசி 21 ரயில் வேகன்களில் ஏற்பட்டது. மொத்தம் 1,250 டன் அரிசி சேலத்திற்கு பொது விநியோக திட்டத்துக்காக அனுப்பப்பட்டது.

## வாரச்சந்தையில் ஆடுகளை தேர்வு செய்த பயனாளிகள்

**ராமநாதபுரம்**, : ராமநாதபுரம் வாரச்சந்தையில் அரசின் இலவச ஆடுகளை பயனாளிகள் தேர்வு செய்து வாங்கிச் சென்றனர்.

தமிழக அரசு கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு இலவச ஆடுகளை வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் ஒரு பயனாளிளுக்கு ரூ.10 ஆயிரம் மதிப்பில் 3 ஆடுகள் மற்றும் ஒரு கிடாய் வழங்கப்படுகிறது. இந்த ஆடுகளை 6 மாதம் முதல் 9 மாத வயதும், நோய் இல்லாமலும் பார்த்து கால்நடைத்துறை டாக்டர்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

ராமநாதபுரம் அருகே பெரியபட்டினத்தில் 82 பயனாளிகள், புதுமடத்தில் 113 பயனாளிகள், புதுவலசையில் 16 பயனாளிகள் என 211 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் நேற்று 200 பயனாளிகளுக்கு ராமநாதபுரம் வாரச்சந்தையில் ஆடுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டன. வாரச்சந்தையில் பயனாளிகளே ஆடுகளை தேர்வு செய்கின்றனர்.

ஆடுகளுக்கு நோய் உள்ளதா என கால்நடை டாக்டர்கள் பரிசோதிக்கின்றனர். நோய் அறிகுறிகள் இருந்தால் அவற்றை வாங்க அனுமதிப்பதில்லை.

நிகழ்ச்சியில் கால்நடை டாக்டர்கள், கால்நடை ஆய்வாளர்கள், பயனாளிகள், விற்பனையாளர் கள் கலந்து கொண்டனர்.